# நெய்தல் ஆய்வு

# NEITHAL AAIVU

ISSN No. 2456 - 2882

மலர் – 4 | இதழ் – 1 | தமிழ் காலாண்டிதழ் | விலை ரூ.100/– | ஜனவரி – மார்ச் 2019

VOLUME - 4 | ISSUE - 1 | TAMIL QUARTERLY | PRICE Rs. 100/- | January - March 2019

**நாட்டார் தெய்வங்கள்**

**சிறப்பிதழ்**



**நா. வானமாமலை**

(Na. Vanamamalai)



2

## கொலையில் உதித்த குல சாமிகள்

# அறியப்படாத அருந்ததியர் இனவரைவியல்

ச.சீனிவாசன்

இயற்கை வழிபாடு முதல் குலதெய்வ வழிபாடு வரை கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழர்களின் நம்பிக்கை. ஆதிகாலத்தில் இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த மனிதன் பின்னர் அதனை நம்பி வாழ்ந்தான். இயற்கை மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாக ஏற்பட்ட நன்மைகளின் விளைவாக இயற்கையை வணங்க ஆரம்பித்தான். மனிதனின் ஆவி வழிபாடு அவனது முன்னோர்களின் இறப்பிலிருந்து தொடங்கியது. பின்னர் விலங்கு மற்றும் பறவை இனங்களைத் தங்கள் குலக்குறிகளாகக் கொண்டு வழிபடத் தொடங்கினான். தொடர்ந்து இயற்கை கடந்த ஆற்றல்கள் கொண்ட பொருட்களுக்கு அதீத ஆற்றல் இருப்பதாக நம்பி அவற்றை வழிபட்டான். பின்னர் இறந்தவர்களுக்கு நடுகல் நட்டு முன்னோர் வழிபாட்டைத் தொடங்கினான். முன்னோர் வழிபாடு நாளடைவில் குலதெய்வ (Clan God) வழிபாடாக மாறியது. குலதெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டின் ஒரு கூறாகும். தமிழ்நாட்டின் பெருவாரியான மக்கள் சிறுதெய்வங்களை வழிபடுகின்றவர்களாக இருக்கின்றனர். சிறுதெய்வங்களின் அடையாளங்களாக, வழிபாட்டு முறைகளாகக் கீழ்க்கண்டவற்றை நாட்டுப்புறவியல் அறிஞர் சு. சக்திவேல் முன்வைக்கிறார். அவை : சிறுதெய்வங்கள் பிறப்பு, இறப்பு உள்ளவை. குறிப்பிட்ட ஆற்றல் கொண்டவை. சிறுதெய்வக் கோவில்களுக்குப் பெரும்பாலும் பிராமணர் அல்லாதோர் பூசாரிகளாக இருப்பர். பாமர மக்கள் மட்டுமே வழிபடக்கூடிய இக்கோவில்களில் உயிர்ப்பலி நிச்சயம் உண்டு. சிறுதெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடு இல்லை. அசைவப் பொருட்கள் படையலுக்குப் பயன்படுத்தப்படும். சிறுதெய்வங்கள் மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுபவை. மாடங்கள், கல், மரம், புற்று இவைகளில் உறையும் சிறுதெய்வங்கள் கொடூர உருவமுடையவை. சிறுதெய்வங்கள் இவ்வுலகில் வாழ்வதாகக் கருதப்படுகின்றன. சிறு மரபைச் (Little Tradition) சார்ந்ததும் கிராம வாழ்க்கையோடு உறவு கொண்டதும் ஆகும் (2007 : 325-327).